

# சீறத்துன்னபி ﷺ

## நாள் 24

# இன்றைய தலைப்புகள்

- பகுதி 1: அல்லாஹ்வுடன் சந்திப்பு
- பகுதி 2: தொழுகையை நிலைநாட்டுதல்
- பகுதி 3: அல்லாஹ்வின் சந்திப்பிலிருந்து பெறப்படும் படிப்பினை
- பகுதி 4: ஒரு குறிப்பிட்ட கப்ரிலிருந்து ஓர் இனிமையான நறுமணம் வெளிப்படும் சம்பவம்

## பகுதி 1: அல்லாஹ்வுடன் சந்திப்பு

- ஸித்ரத்துல் முன்தஹாவில் சில மகத்தான அடையாளங்களைக் கண்ட பிறகு, நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வுடனான சந்திப்பு என்ற அருமையான பரிசு அருளப்பட்டது.

- ஸித்ரத்துல் முன்தஹாவிலிருந்து, நபி (ஸல்) அவர்கள் மேலும் மேலே வரவழைக்கப்பட்டார்கள். அங்கு அவர்கள் பேனா எழுதும் ஒலியைக் கேட்டார்கள்.

- ஒரு ஹதீஸில், அல்லாஹ் முதன்முதலில் படைத்தது பேனா என்று கூறப்பட்டுள்ளது. பின்னர் அல்லாஹ் பேனாவை எழுதச் சொன்னான்.



- அந்த எழுதுகோல் அல்லாஹ்விடம், ‘‘என்ன எழுத வேண்டும்’’ என்று கேட்டது. அதற்கு அல்லாஹ், ‘‘கியாமத் நாள் வரை நடக்கும் அனைத்தையும் எழுது’’ என்று கூறினான்.

- எனவே அல்லாஹ்வின் கட்டளைப்படி நேரடியாக எழுதுகோல் மூலம் எழுதப்படுகிறது.

- ஒரு ஹதீஸிலிருந்து, நபி (ஸல்) அவர்கள் ஸித்ரத்துல் முன்தஹாவைத் தாண்டி மேலே சென்றபோது தனியாகத்தான் இருந்தார்கள் என்றும், அங்குதான் அல்லாஹ்வுடன் தெய்வீக சந்திப்பு நடந்தது என்றும் நாம் ஊகிக்க முடிகிறது.

- நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வை நேரடியாகப் பார்க்கவில்லை, ஆனால்

அவனுடைய திரையை அவர்கள் பார்த்தார்கள். அதுவே எந்த மனிதனும் அல்லாஹ்வைப் பார்க்க முடிந்த மிக நெருக்கமான நிலையாகும்.

- பல பதிவுகள் இருந்தபோதிலும், நபி (ஸல்) அவர்களுக்கும், அல்லாஹ்வுக்கும் இடையிலான உரையாடல் பற்றிய ஆதாரபூர்வமான தகவல்கள் எதுவும் இல்லை. இருப்பினும், இந்த தெய்வீக சந்திப்பின் போது நபி (ஸல்) அவர்களுக்கு மூன்று விஷயங்கள் வழங்கப்பட்டன என்பதை நாம் அறிவோம்.

- முதலில், ஸூரா 2 அல்பகராவின் கடைசி இரண்டு வசனங்கள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டன: வசனம் 285 மற்றும் 286 (ஆமனர் ரசூல்..)

- நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், ‘‘இந்த இரண்டு வசனங்களையும் ஒவ்வொரு இரவும் ஓதுபவருக்கு அந்த இரண்டுமே போதும்.’’ மேலும் மற்றொரு அறிவிப்பில், ‘‘.... பாதுகாக்கப்படுவார்கள்.’’ (ஸஹீஹுல் புகாரீ)

- மற்றொரு பரிசு என்னவென்றால், நபி (ஸல்) உம்மத்துகள் ஷிர்க் வைக்காமல் அல்லாஹ்வை வணங்கி வந்த அனைவரும் மன்னிக்கப்பட்டு, சுவர்க்கத்தில் நுழையச் செய்யப்படுவார்கள் என்று நபி (ஸல்) அவர்களிடம் அல்லாஹ் வாக்குறுதி அளித்தான்.

- இறுதியான மற்றும் மிக முக்கியமான பரிசு ஐந்து நேர தொழுகைகள். இதற்காக அல்லாஹ் ஒரு சிறப்பானத்தைத் திட்டமிட்டிருந்தான்.

## பகுதி 2: தொழுகையை நிலைநாட்டுதல்

- அல்லாஹ் அனைத்து முஸ்லிம்கள் மீதும் தொழுகையை கடமையாக்கினான்; மேலும் அதை ஒரு நாளைக்கு மொத்தம் 50 வக்த் (முறை) செய்யுமாறு கட்டளையிட்டான்.

- நபி (ஸல்) அவர்கள் தெய்வீக சந்திப்பை முடித்துவிட்டு வெளியேறி வானங்களின் வழியாக கீழே இறங்கினார்கள். மூஸா (அலை) இருந்த வானத்தை அடைந்ததும், மூஸா (அலை), ‘‘உங்கள் இறைவன் உங்கள் உம்மத்திற்காக என்ன கொடுத்தான்?’’ என்று நபி (ஸல்) அவர்களிடம் கேட்டார்கள்.

- அதற்கு நபி (ஸல்) அவர்கள், அல்லாஹ் தனது உம்மத்திற்கு ஒரு நாளைக்கு 50 நேர தொழுகையைக் கொடுத்திருப்பதாகக் கூறினார்கள்.

- உடனே மூஸா (அலை), ‘‘உங்கள் இறைவனிடம் திரும்பிச் சென்று, சிறிது நிவாரணம் கேளுங்கள் (அதாவது இதைக் குறைக்கச் சொல்லுங்கள்). எனது உம்மத்தின் மூலம் உங்களை விட எனக்கு அதிக அனுபவம் உள்ளது. உங்கள் மக்களால் ஒரு நாளைக்கு 50 முறை தொழ முடியாது’’, எனக் கூறினார்கள்.



- நபி (ஸல்) அவர்கள் ஜிப்ரீல் (அலை) அவர்களைப் பார்த்து, அவரது கருத்தை அறிய விரும்பினர்கள். ஜிப்ரீல் (அலை) அவர்களும் அதை ஆமோதிப்பதைப் போல தலையசைத்தார்கள். (ஸஹீஹுல் புகாரீ)

- எனவே நபி (ஸல்) அவர்கள் திரும்ப மேலே சென்று அல்லாஹ்விடம், கட்டளையிடப்பட்ட 50 நேர தொழுகைகளைக் குறைக்கக் கோரினார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் இருப்பிடத்திற்கும், மூஸா (அலை) அவர்களுக்கும் இடையில் எத்தனை முறை பயணம் செய்தார்கள் என்பது பற்றிய குறிப்புகள் வேறுபடுகின்றன.

- நபி (ஸல்) ஒவ்வொரு முறையும் குறைத்து வாங்கி வரும்போது, மூஸா (அலை) அவர்களை அல்லாஹ்விடம் திரும்பிச் சென்று மேலும் குறைத்துக் கேட்க அறிவுரை கூறுவார்கள்.

- ஒவ்வொரு முறையும் 5 அல்லது 10 ஆகக் குறைக்கப்பட்டிருக்கலாம். ஆனால், இறுதியாக நபி (ஸல்) அவர்கள் மூஸா (அலை) அவர்களிடம் வந்து,

அல்லாஹ் தொழுகைகளின் நேர எண்ணிக்கையை ஒரு நாளைக்கு 5 ஆகக் குறைத்துவிட்டதாகக் கூறினார்கள்.

- பின்னர் மூஸா (அலை), ''இன்னும் ஒரு முறை திரும்பிச் செல்லுங்கள்'' என்று கூறினார்; ஆனால், நபி (ஸல்) அவர்கள், ''நான் போதுமான அளவு சென்று கேட்டுப் பெற்றுவிட்டேன்; மேலும் கேட்க எனக்கு வெட்கமாக இருக்கிறது. ஆதலால், இதுவே போதும். இப்போது நான் திருப்தியாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கிறேன்'' என்று கூறினார்கள்.

- நமது நபி (ஸல்) அவர்கள் இதைச் சொன்னபோது, ஒரு குரல், ''எனது ஃபரித்ஹா நிலைநாட்டப்பட்டு விட்டது. நான் என் அடியார்களுக்கு அதை எளிதாக்கியுள்ளேன். அது ஐந்து நேரம்; ஆனால் அதற்கு ஐம்பது வெகுமதி அளிக்கப்படும்'' என்று கூறியது.

- இவ்வாறாக அல்லாஹ், முஸ்லிம் உம்மத்திற்கு ஐந்து நேர தொழுகைகளை ஏற்படுத்தினான். அந்த தருணத்திலிருந்து, தொழுகை முஸ்லிம்களுக்கு ஃபர்தஹ் ஆக (கட்டாயமாக) மாறியது.

## பகுதி 3: அல்லாஹ்வின் சந்திப்பிலிருந்து பெறப்படும் படிப்பினை

- தெய்வீக சந்திப்பின் இந்த சம்பவத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பல பாடங்கள் உள்ளன.

- ஐந்து நேரத் தொழுகை மிகவும் முக்கியமானது; இதை நிலைநிறுத்த அல்லாஹ், நபி (ஸல்) அவர்களை தனது தெய்வீக சந்திப்பிற்கு அழைத்திருக்கிறான்.

- 50 நேர தொழுகையை 5 ஆகக் குறைத்த அல்லாஹ்வின் நோக்கம் என்னவென்றால், ஐந்து நேர முயற்சிக்கு 50 நேர நற்கூலியை வழங்குவதன் மூலம் அல்லாஹ் தனது கருணையைக் காட்ட விரும்புகிறான் என்பது.

- மனிதன் அல்லாஹ்வின் கருணையை அவனிடம் முறையிடுவதன் மூலம் பெறுகிறான் என்பதையும், அல்லாஹ் மனிதனின் வேண்டுகோள்களைக் கேட்கிறான் என்பதையும் இதன் மூலம் அறியலாம்.

- அல்லாஹ் 50 நேர தொழுகையில் ஆரம்பித்து இறுதியில் ஐந்தாக அறிவித்ததற்கான மற்றொரு காரணம், மனிதன் ஒரே நோக்கத்திற்காக

மட்டுமே படைக்கப்பட்டுள்ளான். அது அல்லாஹ்வை வணங்குவதற்காக மட்டுமே.

- அல்லாஹ் கூறுகிறான்: ''இன்னும், ஜின்களையும் மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்குவதற்காகவேயன்றி நான் படைக்கவில்லை''. ஸூரா அத்தாரியாத் (51:56)



- அல்லாஹ்வின் கட்டளைக்குப் பின்னால் உள்ள ஞானத்தையும், கருணையையும் புரிந்துகொள்ள இந்த எளிய கணக்கீட்டைச் செய்யலாம். நமக்கு ஒரு நாளில் 24 மணிநேரம் உள்ளது. தூக்கம் மற்றும் உணவுக்காக ஒரு நாளிலிருந்து 8 மணிநேரத்தை நீக்கினால், உங்களுக்கு 16 மணிநேரம் அல்லது 960 நிமிடங்கள் கிடைக்கும்.

- அதை 50 ஆல் வகுத்தால், ஒவ்வொரு 20 நிமிடங்களுக்கும் நீங்கள் தொழ வேண்டியது வந்திருக்கும் என்று அர்த்தம்.

- எனவே அல்லாஹ் தனது கருணையால், மனிதனுக்கு எளிதாக்க விரும்புகிறான். எனவே ஐந்து நேர தொழுகைகளின் பலனை ஐம்பதுக்கு சமமாக வழங்குகிறான் என்பதைக் காட்டுகிறான்.

## பகுதி 4: ஒரு குறிப்பிட்ட கப்ரிலிருந்து ஓர் இனிமையான நறுமணம் வெளிப்படும் சம்பவம்

- அல்லாஹ்வுடனான சந்திப்பு மற்றும் 5 நேர தொழுகையை நிர்ணயித்த பிறகு,

நபி (ஸல்) அவர்கள் பூமிக்குத் திரும்பும் பயணத்தைத் தொடங்கினார்கள்.

- இஸ்ரா மற்றும் மிஃராஜ் பற்றிய பல்வேறு விளக்கங்களில் உள்ள சிக்கல் என்னவென்றால், நிகழ்வுகளின் சரியான காலவரிசையையும், அது எப்போது நடந்தது என்பதையும் ஒன்றாக இணைக்க முடியாது.

- புகாரீ மற்றும் முஸ்லிம் ஹதீஸ்களில் இஸ்ரா மற்றும் மிஃராஜ் தொடர்பான மேலும் இரண்டு சம்பவங்கள் உள்ளன. ஒன்று சுவனத்தைப் பார்ப்பதும் நரகத்தின் தண்டனைகளைப் பார்ப்பதும் ஆகும். மற்றொன்று ஒரு குறிப்பிட்ட கப்ரிலிருந்து ஒரு இனிமையான நறுமணம் வெளிப்படும் சம்பவம் ஆகும். இன்று இனிமையான நறுமண சம்பவத்தைப் பற்றிப் பார்க்கலாம். இன்ஷா அல்லாஹ், சுவனத்தையும், நரகத்தையும் பார்ப்பது பற்றி நாளை விரிவாகக் காணலாம்.

- முஸ்லிமில் உள்ள ஒரு ஹதீஸில், நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''நான் இஸ்ரா மற்றும் மிஃராஜ் சென்ற இரவில், மிகவும் இனிமையான ஒரு நறுமணத்தை முகர்ந்தேன்''.

- எனவே நபி (ஸல்) அவர்கள் ஜிப்ரீல் (அலை) அவர்களிடம், '' இந்த அழகான நறுமணம் எங்கிருந்து வருகிறது?'' என்று கேட்டார்கள்.

- ஜிப்ரீல் (அலை) அவர்கள், ''இது ஃபிர்அவ்னின் மகளின் தலைமுடியையும், அவருடைய குழந்தைகளின் தலைமுடியையும் சீவி வந்த பெண்ணின் நறுமணம்'' என்று கூறினார்கள்.



- நபி (ஸல்) அவர்கள் ஜிப்ரீல் (அலை) அவர்களிடம் அதைப்பற்றிய

விளக்கத்தைக் கேட்டார்கள். ஜிப்ரீல் (அலை) கூறியது:

- ஒருமுறை ஃபிர்அவ்னின் மகளின் தலைமுடியை அப்பெண் சீவும்போது, சீப்பு கீழே விழுந்து விட்டது. அதை எடுக்க அப்பெண் குனிந்தபோது, ‘‘பிஸ்மில்லாஹ்’’ என்றுரைத்தார்.

- அதைக்கேட்ட ஃபிர்அவ்னின் மகள், ‘‘நிச்சயமாக, நீ என் தந்தையின் பெயரைத்தான் சொல்கிறாய்’’ என்றாள்.

- அதற்கு, அந்தப் பெண், ‘‘இல்லை! நான் கூறுவது என் இறைவனும், உன் இறைவனும், உன் தந்தையின் இறைவனுமாகிய அல்லாஹ்’’ என்றார்.

- ஃபிர்அவ்னின் மகள் சிகை அலங்காரப் பெண்ணைப் பற்றி ஃபிர்அவ்னிடம் கூற, அவன் கோபத்தால் கொதித்தான். அந்தப் பெண்ணுக்கு தண்டனை கொடுப்பதன் மூலம், தன் மக்களுக்கு தனது எச்சரிக்கையை காட்ட விரும்பினான்.

- ஃபிர்அவ்ன் சிகை அலங்காரப் பெண்ணை அழைத்து, ‘‘என்னைத் தவிர உனக்கு இன்னொரு இறைவன் இருப்பதாகச் சொல்கிறாயா?’’ என்று கேட்டான். அதற்கு அந்தப் பெண், ‘‘எனது இரட்சகனும், உங்கள் இரட்சகனும் அல்லாஹ்வேதான்’’ என்றார்.

- ஃபிர்அவ்ன் ஒரு பெரிய பாத்திரத்தின் கீழே ஒரு பெரிய நெருப்பும், பாத்திரத்தில் கொதிக்கும் நீரையும் வைக்க உத்தரவிட்டான். பின்னர் அந்தப் பெண்ணையும், அவருடைய குழந்தைகளையும் அங்கு அழைத்துவரச் சொன்னான்.



- அப்பெண்ணுக்கு ஐந்து குழந்தைகள் இருந்தன, அந்தப் பெண்ணின் பார்வையிலேயே, ஃபிர்அவ்ன் அக்குழந்தைகளை ஒன்றன் பின் ஒன்றாக கொதிக்கும் எண்ணெயில் வீசத் தொடங்கினான். கடைசியாக, அப்பெண்ணும், இன்னும் தாய்ப்பால் கொடுத்துக் கொண்டிருந்த குழந்தையும் மட்டுமே எஞ்சி இருந்தன.

- கைகுழந்தையின் காரணமாக அந்தப் பெண்ணுக்கு சிறிது தயக்கம் இருந்தது. ஆனால் அல்லாஹ் அவருக்கு வலிமையைக் கொடுத்தான். அந்தப் பெண் ஃபிர்அவ்னிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தார். அவர் கூறியது: ‘‘என் எலும்புகளும், என் குழந்தைகளின் எலும்புகளும் ஒரே துணியில் ஒன்று சேர்க்கப்பட்டு ஒன்றாகப் புதைக்கப்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்’’. ஃபிர்அவ்ன் இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டான். அந்தப் பெண், தனது கைகுழந்தையுடன் கொதிக்கும் நீரில் குதித்து விட்டார்.

- அப்பெண்ணின் உடலும், அவருடைய குழந்தைகலின் உடலுடன் சேர்ந்து அடக்கம் செய்யப்பட்டது, அந்த கப்ரிலிருந்துதான் நபி (ஸல்) அவர்கள் இனிமையான நறுமணத்தை முகர்ந்தார்கள்.

- அந்தப் பெண்ணின் பெயரோ அல்லது அவருடைய குழந்தைகளின் பெயர்களோ நமக்குத் தெரியாது.

- ஆனால், நபி (ஸல்) அவர்களின் இந்த விளக்கத்தின் மூலம், அவருடைய தைரியம், துணிச்சல் மற்றும் தியாகம் ஆகியவை நமது உம்மத்தால் என்றென்றும் நினைவுகூரப்பட்டு, பாதுகாக்கப்பட்டு, குறிப்பிடப்பட வேண்டும் என்று அல்லாஹ் விரும்பினான்.